சுருக்கம்

தமிழ்நாடு கல்லூரிக் கல்விப்பணி – அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாகவுள்ள 1025 உதவிப்பேராசிரியர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நிரப்புதல் – அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

---

உயர்கல்வி (எப்.2) துறை

அரசாணை (நிலை) எண்.217 நாள்.13.9.2011.
ஆவணி 27
திருவள்ளுவராண்டு 2042
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.106, உயர்கல்வி நாள்.14.5.2007
2. அரசாணை (நிலை) எண்.146, உயர்கல்வி நாள்.1.6.2007
3. அரசாணை (நிலை) எண்.306, உயர்கல்வி நாள்.10.9.2007
4. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.20560/டி5/2011 நாள்.8.6.2011, 12.8.2011 மற்றும் 16.8.2011.

-----------

ஆணை:-

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் தமிழ்நாடு சட்டமன்றத்தில் உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையின்போது 2011 -2012 ஆம் ஆண்டில் அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 1025 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்படும் என்கிற அறிவிப்பினை வெளியிட்டார்.

2. மேலே ஒன்று முதல் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாகவுள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நிரப்பப்பட்டு வருகின்றன.

3. 1.8.2011 அன்றுள்ளவாறு, அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 1037 உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும், அப்பணியிடங்களை ரூ.15600-39100+ AGPரூ.6000 என்ற ஊதிய விகிதத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்புவதற்கு உரிய ஆணை வழங்குமாறு மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்ததில், தற்போது காலியாகவுள்ள உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் 1035, இதில் 331 உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் 2006 முதல் 2010 வரையிலான காலங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அறிவிப்பு செய்யப்பட்டு நிரப்பப்படாத பணியிடங்கள்.

மேற்கூறப்பட்ட 331 பணியிடங்களில், 10 பணியிடங்கள் நீதிமன்ற வழக்குகள் காரணமாக நிரப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் நீதிமன்றத்தில் வழக்கு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட 10 பணியிடங்களைத் தவிர்த்து, காலியாகவுள்ள 1025 உதவிப்பேராசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிடலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

5. மேலே ஒன்று முதல் மூன்றில் படிக்கப்பட்ட ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி உதவிப்பேராசிரியர் காலிப்பணியிடங்கள் குறித்து கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் உரிய விவரங்களை பெற்று நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆசிரியர் தேர்வுவாரியத் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறை அசாகு.எண். 197/DS(KM)/11 நாள்.12.9.2011 –ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை - 6
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை – 6
நகல்:- முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
நிதித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9
நிதித்துறை, சென்னை – 9.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.